NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2019

# TAMIL SECOND ADDITIONAL LANGUAGE: PAPER I

Time: 2 hours 100 marks

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This question paper consists of 8 pages. Please check that your question paper is complete.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions taking note of any choices given.
4. Number your answers exactly as the questions are numbered.
5. All answers must be in TAMIL.
6. It is in your own interest to write legibly and to present your work neatly.

---

IEB Copyright © 2019

## SECTION A

**QUESTION 1** பகுதி ஒன்று

கீழ்வரும் கதையை நன்றாகப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக.

## இறந்தொழிந்த மாணவர்கள்

ஒருநாள் பல மாணவர்கள் நீர் விளையாடுவதற்கு எண்ணினார்கள். ஒரு பெரிய குளத்துக்குச் சென்றார்கள். பலவாறு நீந்தி விளையாடினார்கள். ஒரு பக்கத்தில் இருந்து மற்றொரு பக்கத்திற்கு நீந்திச் செல்வதென்று அந்த மாணவர்கள் பந்தயம் போட்டுக்கொண்டு நீந்திச் சென்றார்கள்.

அந்தக் குளத்தின் அகல நீளம் ஏறக்குறைய ஒரு பர்லாங்கு இருக்கும். மாணவர்கள் ஒரு பக்கத்தில் இருந்து மற்றொரு பக்கத்திற்குப் போய்விட்டு வருவதற்குள் கால் கைகள் ஓய்ந்து போயின நடுக் குளத்தில் வரும்போது ஒரு மாணவனுக்குக் கைகால்களை அசைக்க முடியவில்லை. அவனுக்கு அகவை பதினான்கு. அவன் தான் தளர்ந்துபோய் இக்கட்டில் மாட்டிக் கொண்டதைக் குறிப்பாலும், கூச்சலாலும், நீரில் அமிழ்ந்து மேலெழுவதாலும் புலப்படுத்தினான்.

கரையில் நின்ற ஒரு மாணவன் நீரில் அகப்பட்டுக் கொண்டு தத்தளிக்கும் மாணவனுடைய நிலைமையை உணர்ந்தான். விரைந்து நீரில் பாய்ந்து நீந்திச் சென்றான். உயிருக்கு மன்றாடிக்கொண்டிருந்த மாணவன் உதவிக்குச் சென்ற மாணவனைக் கெட்டியாகக் கட்டிப் பிடித்துக்கொண்டான். உதவிக்குச் சென்ற மாணவனால் நீந்த முடியவில்லை. அவனுந் தொல்லைக்குள் சிக்கிக்கொண்டு தண்ணீரில் மூழ்கத் தொடங்கினான். இரண்டுபேரும் இக்கட்டில் அகப்பட்டுக் கொண்டதைக் கண்டு, மூன்றாம் மாணவன் ஒருவன் விரைந்து உதவிக்குச் சென்றான். நீரில் தத்தளித்துக் கொண்டிருந்த இரண்டு மாணவர்களும் மூன்றாம் மாணவனைக் கட்டிப்பிடித்தார்கள். மறுகணம் மூன்று மாணவர்களும் தண்ணீருக்குள் அமிழ்ந்துவிட்டனர்.

IEB Copyright © 2019

கரையில் நின்ற சிலர் இந்தச் செய்தியைப் பலருக்குந் தெரியப்படுத்தினர். குளத்தின் கரையில் பெரிய கூட்டம் கூடிவிட்டது. நீரில் அகப்பட்டுக் கொண்ட மாணவர்களோ கால்மணி வரையில் தத்தளித்து இறந்துபோனார்கள். அவர்கள் மூவரும் ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்துக் கொண்டிருந்தபடியால், பிணங்கள் மேலே மிதக்காமல் தண்ணீருக்குள் அமிழ்ந்துவிட்டன. பிறகு செம்படவர்களைக் கொண்டு வந்து வலைபோட்டு மாணவர்களுடைய உயிர் நீங்கிய உடல்களை வெளியே எடுத்தார்கள்.

அன்றுமுதல் மற்றைய மாணவர்கள், "ஔவைப் பிராட்டியார் **'நீர் விளையாடேல்'** என்று கூறியுள்ளதை ஒரு பொருட்படுத்தாதபடியால் மூவர் இறந்து போனார்கள்; நாம் ஔவையார் மொழிக்கு மதிப்புக் கொடுத்து அம் மொழியைப் பொன்போலப் போற்றவேண்டும்," என்று முடிவுசெய்து நீர் விளையாடலை விட்டொழித்தார்கள். பெரியோர்கள் கூறியுள்ள மொழிகளை ஒரு பொருட்படுத்தாமல் இகழ்ந்தால், இவ்வாறுதான் தீமை நேரிடும்.

*[ஆத்திசுடி விளக்கக் கதைகள் திரு க இனியன்]*

1.1 காலி இடங்களை நிரப்புக

1.1.1 ஒரு பெரிய ______________ சென்றார்கள். (1)

1.1.2 ________________ மாணவர்களுடைய உடல்களை வெளியே எடுத்தார்கள். (1)

1.1.3 ஒரு மாணவனுக்குக் கைகால்களை ________________ முடியவில்லை. (1)

1.1.4 ________________ மேலே மிதக்காமல் தண்ணீருக்குள் அமிழ்ந்துவிட்டன. (1)

1.1.5 நீரில் அகப்பட்டுக் கொண்ட மாணவர்களோ கால்மணி வரையில் தத்தளித்து ________________ (1)

1.2 சரியான விடை தருக

1.2.1 மாணவர்கள் எங்கே நீந்தினார்கள்? (1)

1.2.2 குளத்தின் அகல நீலம் பற்றி என்ன தெரிகிறது? (1)

1.2.3 பதினான்கு வயது மாணவனுக்கு என்ன ஆயிற்று? (1)

1.2.4 உயிருக்கு மன்றாடிக்கொண்டிருந்த மாணவன் என்ன செய்தான்? (1)

1.2.5 கரையில் நின்ற சிலர் என்ன செய்தார்கள்? (1)

1.2.6 '**நீர் விளையாடேல்**' என்ற வரி இயற்றியவர் யார்? (1)

1.3 பிரித்து எழுதுக

1.3.1 முடியவில்லை (1)

1.3.2 அவனுடைய (1)

1.3.3 மாணவனால் (1)

1.3.4 விட்டொழித்தார்கள் (1)

1.3.5 கொண்டிருந்தது (1)

1.4 எது <u>சரி</u> எது <u>தவறு</u> எனக் கூறுக:

1.4.1 ஒரு சிறிய குளத்துக்குச் சென்றார்கள் (1)

1.4.2 ஒரு மாணவனுக்குக் கைகால்களை அசைக்க மடியவில்லை (1)

1.4.3 மறுகணம் முன்று மாணவர்களும் தண்ணீருக்குன் அமிழ்ந்து விட்டனர் (1)

1.4.4 ஐந்து பேரும் இக்கட்டில் அகப்பட்டுக் கொண்டார்கள் (1)

1.4.5 '**நீர் விளையாடேல்**' என்று கூறியுள்ளதை ஒரு பொருட்படுத்தாதபடியால் மூவர் இறந்து போனார்கள். (1)

1.5 எதிர்ச்சொல் தருக எ.கா. - அது - இது

1.5.1 சிலர் (1)

1.5.2 பெரிய (1)

1.5.3 முடியும் (1)

1.5.4 அந்த (1)

1.5.5 வீரம் (1)

1.6 ஒருமைக்கு பன்மை தருக எ.கா. செடி - செடிகள்

1.6.1 மாணவன் (1)

1.6.2 கை (1)

1.6.3 குளம் (1)

1.6.4 அவன் (1)

1.6.5 போனான் (1)

1.6.6 கூட்டம் (1)

IEB Copyright © 2019

1.7 கீழ்வரும் பகுதியைப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக:

**மயில்**

மயில்களில் ஆண்மயில் மிக அழகானது. இதற்கு நீண்ட கழுத்தும், வண்ணத் தோகையும் உண்டு. ஒவ்வோர் இறகின் நுனியிலும் கருமை, நீலம், பச்சை நிறங்கொண்ட கண் போன்ற புள்ளிகள் உண்டு. பெண் மயிலுக்குத் தோகை இல்லை. கருமேகங்கள் சூழ்ந்தால் மயில்கள் தம் தோகைவிரித்து ஆடும். மயிலின் அகவல் ஒலி மூங்கில்கள் உராய்வதைப் போன்றிருக்கும். மயில்கள், மலைச்சாரல்களிலும், அடர்ந்த புதர்களிலும், மரங்கள் அடர்ந்த இடங்களிலும் வாழும். மலை நிலங்களில் வாழும் பறவை, குறிஞ்சி நிலப் பறவை என அழைக்கப்படுகிறது. இதன் உணவுகள் கடலை, துவரை போன்ற தானியங்கள், பல்லி, பூச்சி, பாம்பு, முதலியன. மயிலுக்கு வழங்கும் வேறு பெயர்கள் மஞ்ஞை, பிணிமுகம், தோகை, சிகி. சங்கத் தமிழ் இலக்கியங்களில் மயில் சிறந்த இடத்தைப் பெறுகிறது.

[*பேராசிரியர். முனைவர் மு.பொன்னவைக்கோ*]

1.7.1 பெயர்ச்சொல் என்றால் என்ன? (2)

1.7.2 மேற்காணும் பகுதியிலிருந்து ஐந்து(5) பெயர்ச்சொற்களை எழுதுக (5)

1.7.3 வினைச்சொல் என்றால் என்ன? (2)

1.7.4 மேற்காணும் பகுதியிலிருந்து நான்கு(4) வினைச்சொற்களை எழுதுக (4)

1.8 சேர்த்து எழுதுக

1.8.1 தாய் + திருநாடு (1)

1.8.2 தன்மை + உடையது (1)

1.8.3 தேசிய + பறவை (1)

1.8.4 மலை + சாரல் (1)

1.8.5 வீட்டு + காரன் (1)

1.9 ஆண்பாலுக்கு பெண்பால் தருக எ.கா. அவன் - அவள்

1.9.1 ஆண்மயில் (1)

1.9.2 திருடன் (1)

1.9.3 மகன் (1)

1.9.4 மாணவன் (1)

1.9.5 சிறுவன் (1)

IEB Copyright © 2019 

1.10 சரியாக எழுதுக

1.10.1 நான் அவன் அடித்தேன் (1)

1.10.2 அவர்கள் கடை போனார்கள் (1)

1.10.3 இந்தச் சிறுவன் தங்கை ஏன் ஓடுகிறாள் (1)

1.10.4 மாணவன் அங்கே உதவி சென்றான் (1)

1.10.5 அது என் பென்சில் (1)

**60 marks**

IEB Copyright © 2019

## SECTION B

## QUESTION 2 பகுதி இரண்டு

கொன்றை வேந்தன்:

2.1 சரியான சொற்களால் முடிவு செய்க

2.1.1 அன்னையும் பிதாவும் _____________ (2)

2.1.2 _____________ சாலவும் நன்று (2)

2.1.3 ஐயும் புகினுஞ் _____________ (2)

2.1.4 _____________ கோயிலு மில்லை (2)

2.2 கொன்றை வேந்தன் விளக்கக் கதைகள்
ஏதேனும் ஒரு கதையை முடிவு செய்க.

2.2.1 ஒரு காலத்தில் இரு நண்பர்கள்…

அல்லது **OR**

2.2.2 ஒர் ஊரில் பச்சைப்பன் ஒருவன் இருந்தான்… (8)

2.3 திருக்குறள்
கொடுக்கப்பட்டுள்ள பகுதிகளைப் பயன்படுத்திக் கீழ்வரும் குறள்களை நிறைவுசெய்க.

2.3.1 அகர முதல எழுத்தெல்லாம் _____________ (2)

2.3.2 மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்க்கு _____________ (2)

2.3.3 இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் _____________ (2)

2.3.4 தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார் _____________ (2)

2.4 திருவள்ளுவரைப் பற்றி சுமார் 4-5 வரிகள் எழுதுக (4)

**[28]**

IEB Copyright © 2019 

**QUESTION 3** பகுதி மூன்று

கவிதை: பாப்பாப் பாட்டு:

இப்பகுதிபைப் படித்து, கேள்விகளுக்குச் சரியான விடை தருக:

கொத்தித் திரியுமந்தக் கோழி - அதைக்
கூட்டி விளையாடு பாப்பா
எத்தித் திருடுமந்த காக்காய் - அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா
பாலைப் பொழிந்துதரும் பாப்பா - அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா
வாலைக் குழைத்துவரு நாய்தான் - அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா
வண்டி இழுக்கும் நல்லகுதிரை - நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு - இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா

பாப்பாப் பாட்டு

3.1 பாப்பாப் பாட்டை எழுதியவர் யார்? (2)

3.2 இரண்டு விலங்குகளின் பெயர்களை எழுதுக (2)

3.3 இரண்டு பறவைகளின் பெயர்களை எழுதுக (2)

3.4 பாப்பா மற்ற பிள்ளைகளோடு எப்படி விளையாட வேண்டும்? (2)

3.5 பசு ஏன் மிக நல்லது? (2)

3.6 பாப்பாவிடம் எந்தெந்த தீமைகள் இருக்கக் கூடாது? (2)
**[12]**

**40 marks**

**Total: 100 marks**

IEB Copyright © 2019